# ஆங்கில மொழி வாசிப்பு மற்றும் எழுத்துத் திறன்களை மேம்படுத்தலின் ஊடாக ஆங்கில பாட அடைவு மட்டத்தை உயர்த்துதல்

(வ/மதீனா வித்தியாலய மாணவர்களை அடிப்படையாகக் கொண்ட செயல் நிலை ஆய்வு)

**எ. சிவபாரதி[1], ச. சண்முகதாசன்[2]**

**சுருக்கம்**

கற்கும் திறமை இருந்தும் பல்வேறுபட்ட காரணங்களால் கற்க முடியாது இருக்கும் மாணவர்களின் ஆங்கில வாசிப்பு மற்றும் எழுத்துத் திறன்களை விருத்தி செய்து, அவர்களை இடைநிலைக் கல்வியை சிறப்பாக கற்கத் தூண்ட வேண்டும் என்ற நோக்கில் இத் தலைப்பு ஆய்வாளரால் தெரிவு செய்யப்பட்டது.

பூகோளமயமாக்கலின் விளைவாக ஆங்கிலக் கல்வியின் முக்கியத்துவம் அதிகரித்துள்ளது. இதனால் ஆங்கிலப் பாட அடைவில் இடர்படும் மாணவர்களின் வாசிப்பு மற்றும் எழுத்துத் திறன்களை மேம்படுத்துவதாக இவ்வாய்வின் நோக்கம் அமைகின்றது.

ஆங்கில வாசிப்பு மற்றும் எழுத்துத் திறன்களில் பின்தங்கியிருக்கும் மாணவர்களை அடையாளம் கண்டு, அவர்களுக்குப் பொருத்தமான கற்பித்தல் முறைகள், கற்பித்தல் உத்திகள், கற்பித்தல் சாதனங்கள், பயிற்சிகள் போன்றன பயன்படுத்தப்பட்டு, ஆங்கிலப் பாட அடைவு மட்டத்தில் முன்னேற்றம் அடைந்துள்ளதை இவ்வாய்வின் மூலம் ஆய்வாளர் காட்டுகின்றார்.

***திறவுச் சொற்கள்:*** *ஆங்கில மொழி வாசிப்பு, எழுத்துத் திறன்களை மேம்படுத்தல், ஆங்கில பாட அடைவு மட்டத்தை உயர்த்துதல்,* ***வவுனியா*** *மதீனா வித்தியாலயம்.*

---

[1] *ஆசிரியர், வ/சுந்தரபுரம் அ.த.க. பாடசாலை வவுனியா*

[2] *சிரேஷ்ட உதவி நூலகர் , வவுனியா வளாகம் , யாழ் பல்கலைக்கழகம் , Corresponding author: shan257@hotmail.com*

## அறிமுகம்

எந்த நாட்டை நோக்கினாலும் மொழியானது முக்கியமான ஒன்றாக காணப்படுகின்றது. மொழியானது கருத்துப் பரிமாற்றத்திற்கான ஓர் ஊடகமாகும். ஒருவரை இன்னொருவருடனோ அல்லது பலரிடமோ தொடர்பு கொள்ளச் செய்வது மொழியாகும். மொழியின் வளர்ச்சி என்பது அம்மொழியின் பயன்பாடுகள், பண்பாடுகள் என்பவற்றுடன் வளர்ந்து செல்கின்றது. இம்மொழியானது தொடர்பாடல் ஊடகமாகவும், சிந்தனா ஊடகமாகவும் அமைவதால் முக்கியமான பாடமாக இது பாடசாலைகளில் கற்பிக்கப்படுகின்றது. மொழியின் நோக்கம் தனியாள் வளர்ச்சி நோக்கம், சமூக நோக்கம், சமய நோக்கம், பண்பாட்டு நோக்கம், பயன்பாட்டு நோக்கம் என பலவாறாக விரிந்து செல்கின்றது. இம்மொழியானது மனிதர்கள் கல்வியறிவைப் பெற்று பூரண மனிதர்களாக சமூகத்தின் செயற்றிறன் மிக்க நற்பிரசையாக உருவாக்குகின்றது.

இந்த நிலையில் எந்த மொழியை எடுத்தாலும் பேசுதல், கேட்டல், வாசித்தல், எழுதுதல் ஆகிய நான்கும் மொழித்திறனின் அடிப்படையாகக் காணப்படுகின்றன. இவற்றின் பிரதானமானவர்கள் சிறுவர்கள் ஆகும். இவர்களுக்கு எவ்வாறு கற்பிக்கப்படுகின்றது? இவர்கள் எவ்வாறு கற்கின்றார்கள்? கற்பதற்கான வாய்ப்புக்கள் எந்தளவில் வழங்கப்படுகின்றன? கற்பதற்கான பெற்றோரின் பங்களிப்பு எவ்வாறுள்ளது? என்பனவற்றின் அடிப்படையிலேயே மாணவரின் மொழித்திறன் விருத்தி தங்கியுள்ளது. வாசிப்புத்திறன், எழுத்துத்திறன் விருத்திக்கும் மேலுள்ளவை மிகவும் முக்கியமானதாகும். வாசிப்புத்திறனில் உச்சரித்தல் என்பது மிக முக்கியமானதாகக் காணப்படுகின்றது. எமது நாட்டில்முக்கியமான மொழியாக ஆங்கிலம் காணப்படுகின்றது. இம்மொழியில் சரியாக உச்சரிப்பதற்கு மொழியின் உச்சரிப்பு விதிகளைக் கற்பதுடன் நன்கு பயிற்சி செய்வதும் அவசியமாகும். உச்சரிப்பு,வாசிப்புத்திறன், எழுதுதல் திறன் விருத்திக்கான வாய்ப்புக்கள், அனுபவங்கள்,சந்தர்ப்பங்கள் என்பன திட்டமிட்ட ரீதியில் அவ்வவ்வயது, தரங்களில் வழங்கப்படவேண்டும். அந்தந்த நேரத்திலேயே வாசித்தல், எழுதுதல் விருத்திக்கான பிரச்சினைகள் இருப்பின் தீர்த்தும் வைக்கப்பட வேண்டும்.

ஆங்கிலமொழி என்பது எமது நாட்டில் சர்வதேச மொழியாக காணப்படுகின்றது. ஆங்கில மொழியை ஆரம்ப, இடைநிலை, உயர்நிலை வகுப்புக்களில் தகுந்த முறையில் கற்பிக்கப்பட்டிருந்தாலே மாணவர்கள் பயனடைய முடியும். நன்றாக உச்சரித்தல்,வாசித்தல், திறமையாக பேசுதல், தெளிவாக எழுதுதல் போன்ற ஆற்றல்களைப் பெறாமல் ஒருவர் சிறந்த சிந்தனையாளராகவோ, புதிய திறன்களை உருவாக்கும் ஆற்றல் உள்ளவராகவோ, தெளிவான கருத்துக்களை உடையவராகவோ விளங்கமுடியாது.ஆங்கில மொழி விருத்திக்கு உச்சரிப்பு,வாசிப்பு, எழுத்து என்பன மிகவும் முக்கியமானதாகும்.

பொதுவாக எழுத்துக்களுக்குரிய ஒலியைத தெரிந்து அவ்வொலிகளைச் சரியாக ஒலிக்கும் ஆற்றல் உச்சரிப்பு எனப்படுகின்றது. இதுகண்ணுடனும்,மூளையுடனும், நாவுடனும் தொடர்புபட்டுள்ளது. எழுத்துக்களை கண்ணால் பார்த்து வாயினால் உச்சரித்துப் பொருள் உணர்வதே வாசிப்பு எனப்படுகின்றது. மொழியின் ஒலி

வடிவத்தையும், வரிவடிவத்தையும் தழுவிய கிரகித்தல் ஊடகமாகவும் வாசிப்பு உள்ளது. வரிவடிவத்தில் உள்ள சொற்களை ஒலி வடிவமாக மாற்றி உச்சரிக்கும் உறுப்புக்களும் (வாய், நாக்கு, குரல்வளை, தொண்டை, காற்றுக்குழல், சுவாசப்பை) சொற்களை நோக்கும் கண்களும், மூளை எனும்பரிவர்த்தனை நிலையமும் ஒன்றுடன் ஒன்று ஒத்திசைவாக உழைத்தால் தான் வாசிப்பு சரியாக நடைபெறும். எனவே வாசிப்பை ஓர் உடல், உள இயக்கப்படிமுறைச் செயற்பாடு என்று கூறமுடியும்.

அத்துடன் மொழியை எழுதுதல் என்பது உச்சரித்துப் பொருள் கொண்ட முறையில் சொற்களாகவும், வசனங்களாகவும், பந்திகளாகவும் அமைத்தல் ஆகும்.

சுயகற்றல், கிரகித்தல், தகவல் சேகரித்தல், மொழியறிவு என்பன வாசிப்புக்கும், எழுத்துக்கும் தேவையான தேர்ச்சிகளாகும். கற்றலுக்காக மட்டுமன்றி செய்திகள் அறிதல், தொடர்பு கொள்ளல், இரசித்தல், பொழுதுபோக்கு போன்றவற்றுக்கும் இது உதவுகின்றது. அத்துடன் கருத்துணர்தல், இலக்கிய இன்பம் நுகர்தல், கற்பனை ஆற்றலை வளர்த்தல், மொழித்திறன் விருத்தி போன்றவற்றிற்கும் வாசிப்பும், எழுத்தும் அவசியமாகும்.

உலகில் எத்தகவல்களையும் அறிந்து கொள்வதற்கு உச்சரித்து வாசிப்பது அடிப்படையானது. நூல்கள், கவிதைப் புத்தகங்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், இணைய வாசிப்பு வளங்கள், நூலகங்கள் என்பன வாசிப்பு விருத்திக்காக உருவாக்கப்படுகின்றன. இதனூடாக மாணவரின் அறிவும், மொழியாற்றலும் விருத்தியடைகின்றது. இவ்வாறு பெற்ற அறிவுத் திரட்சியை வெளிப்படுத்துவதற்கு எழுத்தாற்றலும், பேச்சாற்றலுமே உதவுகின்றன.

ஆங்கில உச்சரிப்பு,வாசிப்பு, எழுதுதல் என்பது பாடசாலையில் முக்கியம் பெறுவது போல வாழ்க்கையிலும் முக்கியம் பெறுகின்றது. குறிப்பிட்ட விடயத்தை மாணவர்கள் உச்சரித்து வாசித்து விளங்கிக் கொண்டால் மாத்திரமே எழுத்தில் எழுத முடியும். இன்றைய கற்பித்தல் கற்றல் சூழ்நிலையில் மாணவரிடையே வாசிப்பு, எழுத்தை அதிகரிக்க செய்யும் செயற்பாடுகளாக ஒப்படை வழங்குதல், கையேடு தயாரித்தல், கலை நிகழ்வுகளில் பங்கெடுக்க வைத்தல், கட்டுரை, கவிதை எழுதுதல் போன்றன மேற்கொள்ளப்படுகின்றது. ஆங்கிலத்தில் வாசிப்பு, எழுத்து ரீதியான போட்டிகள் நடாத்தப்படுகின்றன. பாடசாலைகள்,நூலகங்களில் "வாசிப்பு மாதம்" என்பது கொண்டாடப்படுகின்றது.

ஆரம்பவகுப்புக்களில் வாசிப்பு,எழுத்துத் தேர்ச்சியைக் கொண்டு இடைநிலை வகுப்பில் ஆங்கில மொழி கற்பித்தல் அமைய வேண்டும். இதற்கு மாணவனின் உண்மையான தேர்ச்சிநிலை அறியப்படவேண்டும். இதனடிப்படையில் பாடத்திட்டத்தின்படி உள்ள செயற்பாடுகளையும், அதற்கு மேலதிகமாகவும் மாணவரை வாசிக்க, எழுத தூண்ட வேண்டும். மாணவர்கள் விரும்பி வாசிக்க,விளங்கி கேள்விக்கு விடை எழுதக் கூடிய படங்களுடன் காணப்படும் புத்தகங்கள் அவர்களின் வாசிப்பு, எழுதும் பழக்கத்தை தூண்டக்கூடியவையாகும்.

## ஆய்வுப் பின்னணி

வவுனியா மாவட்டத்தின் தெற்கு வலய பாடசாலைகளில் ஒன்றாக மதீனா வித்தியாலயம் காணப்படுகின்றது. இப்பாடசாலை தரம் 01 தொடக்கம் தரம் 11 வரையான வகுப்புக்களைக் கொண்டவகை IIIச் சேர்ந்த இடைநிலைப் பாடசாலையாகும். இப்பாடசாலையில் கட்டடங்கள் போதியளவில் காணப்பட்டாலும் ஏனைய பௌதீக வளங்கள் தேவைக்குக் குறைவாகவே உள்ளன. இங்கு கற்பவர்களில் பெரும்பாலானவர்களுக்கு கற்க வேண்டும் என்ற அவா இல்லாது உள்ளமை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இப்பாடசாலை வவுனியா நகரத்திற்கு மிக அண்மையில் இருந்தாலும் கல்வித் திணைக்களத்தினால் அதிகளவில் கவனிக்கப்படாத பாடசாலையாகவே காணப்படுகின்றது. அத்துடன் இப்பிரதேசமும் வரட்சி, தண்ணீர் பற்றாக்குறையுடன் வளங்குன்றியதாகக் காணப்படுகின்றது.

இங்கு சராசரியாக 160 மாணவர்கள் கல்வி கற்கின்றனர். அதிபர் உட்பட 18 ஆசிரியர்கள் கடமையாற்றுகின்றனர். இப்பாடசாலை வவுனியா நகரத்திலிருந்து 6மை்தொலைவில் அமைந்துள்ளது. இக்கிராமத்தில் முஸ்லீம் மக்கள் அதிகமாகவும், இந்துக்கள் குறைவாகவும் வாழ்கின்றார்கள். இப்பாடசாலை மாணவர்கள் ஏதோ ஒரு வகையில் பின்தங்கியவராகவே காணப்படுகின்றனர்.

## ஆய்வின் நியாயப்பாடு

வ/மதீனா வித்தியாலயம் பின்தங்கிய ஒரு கிராமப் பாடசாலையாகும். இங்கு பாடசாலைக்கான பௌதீக வசதிகள், ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுகின்றது. 1990 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலைக்கு ஆங்கில ஆசிரியர் நியமனம் தொடர்ச்சியாக வழங்கப்படுவதில்லை. மாற்றலாகிச் செல்லும் ஆங்கில ஆசிரியர்களுக்கு பதிலாசிரியர்கள் உடனே மீள்நிரப்பப்படுவதுமில்லை. இதனால் மாணவர்கள் ஆங்கில பாடத்தில் விருப்பமற்று இருப்பதுடன் மிகவும் பின்தங்கிய நிலையிலேயே இருக்கின்றார்கள்.

இவர்களில் தரம் 07, தரம் 08 இல் 40 மாணவர்கள் கல்வி கற்கின்றனர். இவர்களில் 20% எல்லாப் பாடங்களிலும் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளனர். மேலும் ஆங்கில பாடத்தில் ஆரம்ப வகுப்பான தரம் 03 மாணவர்களுக்குரிய எழுத்துக்களைக்கூட இனங்காண முடியாதவர்களாக 10% மாணவர்கள் உள்ளனர். இவர்களில் 30 மாணவர்கள் இவ்வாய்வுக்குத் தெரிவு செய்யப்படுகின்றனர்.

ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ள தரம் 07, தரம் 08 மாணவர்களில் 05 மாணவர்கள் முதல் இரண்டு தவணையிலும் சராசரியாக 65% வரவையே கொண்டுள்ளனர். ஏனையோர் அனைவரும் வறுமையில் உள்ளவர்களாகவும், பாடங்களில் பின்தங்கிய நிலையிலும் காணப்படுகின்றனர். A, B, C வரிசையில் முதல் அரைவாசி எழுத்தைக் கூட இனம் காணமுடியாத நிலையில் இருவர் உள்ளனர். இவர்கள் எழுத்துக்களை இனங்காண நீண்ட நேரம் எடுக்கின்றது. அனேக மாணவர்கள் கற்றலில் நாட்டமின்றி இருப்பதுடன் வீட்டிலும் கல்வி கற்பதற்கு தூண்டப்படுவதில்லை. பாடசாலையில் கொடுக்கும் வீட்டுவேலைகள் செய்வதற்கு பெற்றோர்கள் உதவுவதுமில்லை. இவர்கள் பாடசாலையில் மட்டுமே கற்பவர்களாக உள்ளனர்.

சுயவாசிப்பைத் தூண்டக் கூடியதற்கான வீட்டுப் பின்னணி இல்லாததும், அக்கிராமத்தில் 90% மான மக்கள் வறுமையானவர்களாக இருப்பதாலும் அங்கு பிள்ளைகளின் அடிப்படை தேவைகளை நிறைவேற்ற முடியாது பெற்றோர் திண்டாடுகின்றனர். இந்த நிலையில் ஆங்கில கல்வி மேம்பாட்டிற்கென செலவு செய்வதை அவர்கள் சிந்தித்துக்கூடப் பார்க்கமாட்டார்கள். மேலும் கிராம சூழலில் ஆங்கில கல்வி, ஆங்கில வாசிப்பு மற்றும் எழுதுதலுக்கான தேவை காணப்படாமையால் அவர்கள் தமது தாய்மொழியை மட்டுமே பேசுகின்றனர். அதனூடாக அவர்களது அன்றாட தேவைகளை நிறைவு செய்கின்றனர். இதனால் குறிப்பிட்ட வயது வரை அல்லது வெளி இடங்களுடன் தொடர்பு கொள்ளும் வரை அவர்களுக்கு ஆங்கில வாசிப்பு, எழுதுதல் என்பன தேவையற்ற ஒரு கல்வியாகவே காணப்படுகின்றது. இதனால் அவர்களிடம் ஆங்கில வாசிப்பையும், எழுதுவதையும் ஊக்குவித்தல் மிகவும் கடினமாக உள்ளது. அத்துடன் அக்கிராமத்தில் ஆங்கிலம் கற்பதற்கான மேலதிக வசதிகளோ, ஆசிரியர் வசதியோ காணப்படவில்லை. மேற்போன்ற காரணங்களினால் ஆங்கிலக் கல்வி மிகவும் பின்தங்கிய நிலையிலேயே உள்ளது.

மேலுள்ள பிரச்சினைகள் உள்ள மாணவர்களிடம் பின்வரும் பண்புகளும் காணப்படுவதை அவதானிக்க முடிகின்றது. அவையாவன:

01. ஆங்கில மொழியில் மட்டுமன்றி ஏனைய பாடங்களிலும் விருப்பமின்றி இருத்தல்.
02. கல்வி கற்பதில் அக்கறையின்மை.
03. கல்விச் செயற்பாட்டில் பெற்றோர்களது ஒத்துழைப்பு இல்லை.
04. வகுப்பறையில் மாணவர்கள் அவதானிப்பது மிகக்குறைவாக இருத்தல்.
05. பாடசாலைக்கான வரவு குறைவாக இருத்தல்.
06. கற்பிக்கும் போது வகுப்பைக் குழப்புகின்றவர்களாக உள்ளனர்.

ஆனால் இம்மாணவர்கள் விளையாட்டுக்களிலும், கலைகளிலும் ஆர்வமுள்ளவர்களாக உள்ளனர். இவர்களுக்கு வாசிப்பு மற்றும் எழுத்துக்களை விசேடமாக கற்பிப்பதன் மூலம் சொற்கள், வசனங்கள், பந்திகளை எழுதி வாசிக்க வைக்க முடியும் என்பதுடன் தொடர் பயிற்சிகள் மூலம் வாசிப்பு மற்றும் எழுத்துத்திறன்களை மேம்படுத்தி ஆங்கில பாட அடைவு மட்டத்தில் உயர்ச்சியை ஏற்படுத்த முடியும் என்ற நம்பிக்கையை ஆய்வாளர் கொண்டுள்ளார்.

### ஆய்வு வினா

**"ஆங்கில வாசிப்பு மற்றும் எழுத்துதிறன்கள் மிகக் குறைவாக உள்ளமைக்கான காரணங்கள் எவை?"** என்பதாக ஆய்வு வினா அமைகின்றது. இதற்கு பின்வரும் காரணங்களைக் குறிப்பிடலாம்.

01. மாணவர்கள் ஆங்கில எழுத்துக்களைச் சரியாக இனங்கண்டு உச்சரிக்கின்றார்களா?
02. ஆங்கிலவாசிப்பின் பொறிமுறைகளை அனுசரித்து வாசிக்கின்றார்களா?

03. பாடத்தின் கருத்துக்களை விளங்கி வாசிக்கின்றார்களா?
04. எழுதும் போது எதிர்நோக்கும் பிரச்சினைகள் எவை?
05. எழுத்துப் பிழைகள், இலக்கணப் பிழைகளை எவ்வாறு களைந்து சொற்களஞ்சியத்தை எவ்வாறு விருத்தி செய்வது? போன்றனவாகும்.

## ஆய்வின் குறிக்கோள்

ஒவ்வொரு செயற்பாட்டிற்கும் குறித்த நோக்கம் அல்லது குறிக்கோள் காணப்படும். குறிக்கோள் இன்றி செயற்படும் எந்த விடயமும் வெற்றியளிப்பதில்லை. இதனால் இச்செயல்நிலை ஆய்வுக்கான குறிக்கோள்கள் பின்வருமாறு குறிப்பிடப்படுகின்றன.

01. ஆங்கில எழுத்துக்களை இனங்கண்டு உச்சரிக்கும் திறனை மேம்படுத்தல்.
02. பொறிமுறைகளை அனுசரித்து வாசிக்கப் பயிற்சி செய்வித்தல்.
03. வாசிக்கும் போது கருத்தூன்றி வாசிக்கச் செய்தல்.
04. பின்தங்கியிருக்கும் மாணவர்களைச் சிறிய சொற்களையும், சிறிய வசனங்களையும் வாசிக்க வைத்தல்.
05. ஆங்கிலப் பாடத்தின் தேவையை உணர வைத்தல்.
06. மாணவரின் சுயகற்றல், சுயவாசிப்பை அதிகரிக்க நடவடிக்கை எடுத்தல்.

## ஆய்வு முறையியல்

ஆய்வொன்றினை முன்னெடுத்துச் செல்வதற்கு பயன்படுத்தப்படுகின்ற கருவிகள், வளங்கள், நுட்பங்கள் போன்றன தொடர்பாக அவற்றை வெளிப்படுத்தி அவற்றினை பகுப்பாய்வுக்கு உட்படுத்துவது ஆய்வு முறையியல் ஆகும். ஆய்வு முறை செயல்நிலை ஆய்வாக இருக்கின்ற போது கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் உயர்மட்ட விளைதிறனைப் பெறுவதற்காகவும், விஞ்ஞான பூர்வமான உண்மையைக் கண்டறிவதாகவும், புலப்பயிற்சியாகவும் ஆய்வு அமைகின்றது.

தரம் 07, தரம் 08 மாணவர்களுக்கும் ஆங்கில வாசிப்பு, எழுதுதல் என்பது பிரச்சினைக்குரிய ஒரு செயற்பாடாக காணப்படுகின்றது. தவணைப் பரீட்சைகளில் ஆங்கிலப் பாடத்தில் மிகவும் குறைந்த புள்ளிகளையே எடுத்திருப்பதை அவர்களின் புள்ளிப் பதிவேட்டை அவதானித்ததன் மூலம் அறிய முடிந்தது. எனவே இதற்கான காரணங்களைக் கண்டறியும் நோக்கோடு இவ்வாய்வு தெரிவு செய்யப்பட்டது. இவ்வாய்வில் ஆங்கிலப் பாட புள்ளிக் குறைவுக்கான காரணங்களைக் கண்டறிவதுடன், அதற்கான மேம்படுத்தல் செயற்பாடுகளும் வழங்கப்படுகின்றன.

## தரவு அளிக்கையும் பகுப்பாய்வும்

ஆய்வாளரால் மேற்கொள்ளப்பட்ட “ஆங்கில வாசிப்பு மற்றும் எழுத்துத் திறனை மேம்படுத்தி ஆங்கிலப் பாட அடைவை முன்னேற்றுதல்” என்ற ஆய்வுக்கான தரவு அளிக்கையும் பகுப்பாய்வும் பற்றியதாகஇவ்வியல் அமைகின்றது. எந்தவொரு செயற்பாட்டிற்கும் மூலாதாரமாகப் “பிரச்சினைகளை இனங்காணல்” அமைகின்றது. பிரச்சினைகளை இனங்கண்டால் தான் அதற்குரிய தரவுகளையும், தகவல்களையும் திரட்டி, ஒழுங்கமைத்துப் பொருத்தமான கணிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டு ஆய்வு வினாவுக்கு விடையளிக்க முடியும்.

தரவுப்பகுப்பாய்வு என்பது "சேகரிக்கப்பட்ட தரவுகளில் இருந்து அவதானிக்கப்பட்ட பல்வேறு கோலங்கள் அல்லது சாராம்சங்களின் அடிப்படையில் பெறப்பட்ட கூற்றுக்களைக் கொண்டு ஒரு குறிப்பிட்ட ஆய்வு என்னென்ன அம்சங்களை அல்லது விடயங்களைச் சுட்டி நிற்கின்றது என்பதை வெளிக்காட்டுவதாகும்" (பாஸ்கரன், 2004, ப.70)

தரவுப்பகுப்பாய்வானது ஆய்வின் விளைவு என்ன என்பதை விபரித்தல், ஏன் ஆய்வு செய்யப்படுகின்றது என விளக்கமளித்தல் ஆகிய செயன்முறைகளைக் கொண்டது. இச்செயன்முறைகளின் ஊடாக ஆய்வாளரது நடைமுறைகள் பற்றிய எண்ணக்கருக்களையும் விளக்கமான பெறுபேறுகளையும் விருத்தி செய்ய முடியும். ஆய்வாளர் ஒருவர் தனது தரவுத்தொகுதி ஒன்றின் உட்கட்டமைப்பு, இயல்புகள் நடத்தைகள் போன்றவற்றை விளக்க அது முறையான பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டிருத்தல் அவசியமாகும்.

ஆய்வினை முன்னெடுத்துச் செல்ல தரம் 07, தரம் 08 மாணவர்களுக்கான வினாக்கொத்து, முற்சோதனைப் புள்ளிகள், பிற்சோதனைப் புள்ளிகள் போன்றவற்றின் ஊடாக தரவுகள் பெறப்பட்டு பகுப்பாய்வு மூலம் ஆய்வாளர் ஒரு புலக்காட்சியை இந்த அத்தியாயத்தில் வெளிக்கொணர முயல்கின்றார். ஆகவே ஆய்வின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக பின்வரும் செயற்பாடுகள் இவ்வியலில் உள்ளடக்கப்படுகின்றது.

01. ஆய்வுக்குரிய மாணவர்கள் சார்பாக ஆய்வாளனால் திரட்டப்பட்ட பிற்சோதனைப் புள்ளி விபரங்கள்.
02. முற்சோதனை மற்றும் பிற்சோதனைப் புள்ளிகளுக்கிடையில் பொருண்மையை சோதிப்பதற்கான " வ "சோதனை விபரங்கள்.
03. முற்சோதனை மற்றும் பிற்சோதனைப் புள்ளிகளின் தொடர்பை விளக்குவதற்கான இணைபுக் குணகம் கணித்தல் பற்றிய விபரம்.
04. முற்சோதனை மற்றும் பிற்சோதனைப் புள்ளிகளை ஒப்பீடு செய்தல்.
05. தரவுகளுக்கு விளக்கம் அளித்தல்.
06. ஆய்வு முடிவுகளை அறிக்கைப்படுத்தல்.

மேலுள்ள செயற்பாட்டை மேற்கொள்வதற்குப் பொருத்தமான அட்டவணைகள், வரைபுகள், ஒப்பீடுகள் போன்றன மேற்கொள்ளப்பட்டு ஆய்வுப் பிரச்சினைக்கான தீர்வுகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

### ஆய்வின் பெறுபேறுகள்

இன்றைய நவீன தொழில்நுட்ப மற்றும் பூகோளமயமாகிய உலகில் ஆங்கிலக் கல்வி என்பது மிக இன்றி அமையாத ஒரு முக்கிய விடயமாக அனைத்து தரப்பினருக்கும் வேண்டப்படுகின்றது. ஆனால் பாடசாலை மட்டத்தில் மாணவர்கள் ஆங்கிலம் கற்பது என்பது மிகவும் பின்தங்கிய நிலையிலேயே காணப்படுகின்றது. அதுவும் கிராமப் புறப் பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை மற்றும் பல்வேறு பட்ட காரணிகளால்

ஆங்கிலப் பாடம் என்பது மாணவர்கள் மத்தியில் தேவையற்ற விடயம் போலவே தோன்றுகின்றது.

இவ்வாறான சூழ்நிலையில் ஆய்வாளர் ஆங்கிலப் பாட அடைவு மட்டத்தை அதிகரிப்பதற்கு மாணவர்கள் மத்தியில் வாசிப்பு மற்றும் எழுத்து ஆற்றல்களை மேம்படுத்துவதன் மூலம் ஆய்வுக்குட்படுத்திய மாணவர்களின் அடைவு மட்டத்தில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதை "வ" சோதனை, இணைபுக் குணகத்தின் மூலம் உறுதிப்படுத்துகின்றார்.

இனங்காணப்பட்ட பிரச்சினைகளுக்குரிய மாணவர்களை அவர்களின் தரத்திற்கு ஏற்ப வாசிக்க இடர்படுவோர், எழுத்துக்களை அடையாளம் கண்டு உறுப்பமைய எழுத இடர்படுவோர்,ஆங்கில இலக்கணத்தில் இடர்படுவோர் என வகைப்படுத்தி அவர்களுக்கான பயிற்சிகள் வழங்கப்பட்டது. அதற்காக சில கற்பித்தல் முறைகளும், கற்பித்தல் உத்திகளும்,துணைச்சாதனங்களும் பயன்படுத்தப்பட்டது.இச்செயலாய்வின் மூலம் மாணவர்களின் வாசிப்பு மற்றும் எழுத்துத் திறன்களில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதனைக் காண முடிகின்றது. இங்கு ஒவ்வொரு மாணவர்களினதும் வாசிப்பு மற்றும் எழுதுதல் திறன்களில் ஏற்பட்ட மேம்பாட்டு வீதமானது வேறுபட்டுக் காணப்படுகின்றது. அதாவது மாணவர்களின் தனியாள் வேறுபாட்டுக்கு அமைய அவர்களின் முன்னேற்ற அளவும் வேறுபட்டே காணப்படுகின்றது எனலாம்.

இவ்வாறாக மாணவர்களின் ஆங்கிலப் பாட அடைவு மட்டத்தை அதிகரிப்பதற்காக கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் மிகவும் நுணுக்கமான முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டது. இதன் போது ஒவ்வொரு செயற்பாட்டிற்கும் ஏற்ற வகையில் கற்பித்தல் முறைகள் தெரிவு செய்யப்பட்டு ஆய்வாளரால் பயன்படுத்தப்பட்டது. இவ்வாய்வுச் செயற்பாட்டின் போது ஆய்வுக்குட்படுத்தப்பட்ட அனைத்து மாணவர்களும் மிகவும் ஆர்வத்துடனும் உற்சாகத்துடனும் செயற்பட்டமையை ஆய்வாளரால் அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியில் மாணவர்களின் மேம்படுத்தல் செயற்பாட்டுகள் நடைமுறைப்படுத்திய பின்னர் முற்சோதனைக்கு ஒப்பான பிற்சோதனை ஒன்று நடாத்தப்பட்டு மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டது. இதனால் கிடைத்த பெறுபேறுகளின் படி மாணவர்கள் ஆங்கில பாட அடைவு மட்டத்தில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதை மாணவர்கள் பெற்றுக் கொண்ட புள்ளிகளின் இடைகளின் வித்தியாசங்களுக்கிடையிலான பொருண்மையைச் சோதிக்க மேற்கொண்ட "வ" சோதனையானது 5% பொருண்மை மட்டத்தில் அட்டவணைப் பெறுமானத்திலும் பார்க்க உயர்வான பெறுமானத்தைக் காட்டியது. எனவே முற்சோதனை மற்றும் பிற்சோதனையில் மாணவர்கள் எடுத்துக் கொண்ட புள்ளிகளில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது எனக் கூற முடியும்.

ஆய்வாளரால் ஆய்வின் முடிவினை மேலும் வலுப்படுத்தும் நோக்கில் இணைபுக் குணகத்தின் பொருண்மையும் சோதிக்கப்பட்டது. இதனடிப்படையில் மாணவர்கள் முற்சோதனை மற்றும் பிற்சோதனைகளில் பெற்றுக்கொண்ட புள்ளிகளுக்கிடையிலான பெருக்கத் திருப்பக் குணகம் கணிக்கப்பட்ட போது வாசிப்புச் செயற்பாட்டின்

இணைபுக் குணகப் பெறுமதி 0.88 ஆகவும், எழுத்துச் செயற்பாட்டின் இணைபுக் குணகப் பெறுமதி 0.94 ஆகவும் பெறுமானத்தைக் காட்டியது. இப்பெறுமானம் நேர்பெறுமானமாகவும் உயர் பெறுமானமாகவும் காணப்படுவதனால் ஒவ்வொரு மாணவர்களும் தமது அடைவு மட்டத்தில் வேறுபட்ட அளவில் முன்னேற்றம் அடைந்துள்ளார்கள் எனக் கூற முடியும்.

இவ்வாறே முற்சோதனை மற்றும் பிற்சோதனையில் மாணவர்கள் பெற்றுக் கொண்ட புள்ளிகளுக்கிடையிலான பெருக்கத் திருப்ப இணைபுக் குணகம் கணிப்பதன் மூலம் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களில் கீழ் நிலைப் புள்ளிகளைப் பெற்றவர்களுக்கா அல்லது மேல் நிலைப் புள்ளிகளைப் பெற்றவர்களுக்கா அதிக நன்மை கிடைத்தது என்பதைச் சுட்டிக் காட்டும் ஒரு சுட்டியாகப் பயன்படுத்த முடியும். ஆய்வாளனின் வாசிப்பு, எழுத்துச் செயற்பாட்டின் முற்சோதனை மற்றும் பிற்சோதனை இணைபுக் குணகப் பெறுமானம் இரண்டும் நேர் பெறுமதியையும், உயர் பெறுமதியையும் காட்டுவதால் இச்செயற்பாட்டின் மூலம் தாழ் புள்ளி எடுத்த மாணவர்களை விட உயர்புள்ளி எடுத்த மாணவர்களே அதிகளவான நன்மை பெற்றிருப்பதை காட்டுகின்றது.முற்சோதனை மற்றும் பிற்சோதனைப் புள்ளிகளுக்கு வரையப்பட்ட கோடுகளின் இடைவெளி மாணவர்களின் புள்ளிகளில் ஏற்பட்ட ஏற்றத் தாழ்வுகளைக் காட்டி நிற்கின்றது.

மேற்குறிப்பிட்ட வெளிப்பாடுகளின் அடிப்படையில் ஆய்வாளர் தாழ் புள்ளி எடுத்தவர்களின் மேல் இன்னும் அதிகமாக அக்கறை காட்டி செயற்பாடுகளை திட்டமிட்டு முன்னெடுத்திருக்கலாம் என்பது நோக்கப்படுகின்றது.

மேலும் உற்றுநோக்கப்பட்ட விடயத்தின் அடிப்படையில் மாணவர்கள் தமக்குத் தெரியாதவற்றை ஆசிரியரிடம் உடனுக்குடன் கேட்டு அறிந்து கொண்டனர். அத்துடன் கலந்துரையாடலில் ஒரு மாணவனுக்குத் தெரிந்த சொற்கள், கருத்துக்கள் ஏனைய மாணவர்களும் அறியக் கூடியதாக இருந்தது. இதன்மூலம் ஒவ்வொரு மாணவருக்கும் வாசிக்கக் கூடிய சந்தர்ப்பம் வழங்கப்பட்டதால் எல்லோரும் முன்வந்து வாசிக்க பழகிக் கொண்டனர். இம்முறையில் துலங்கல் அதிகமாக காணப்பட்டது. விளையாட்டு மூலம் கற்பிக்கப்பட்ட போது இதில் எல்லா மாணவர்களும் முழு விருப்பத்துடன் ஈடுபட்டதைக் காணக்கூடியதாக இருந்தது. இங்கு விருப்பமான துலங்கலை மாணவர்கள் வெளிப்படுத்தினர்.

சிறிய கதைப் புத்தகங்கள் மாணவர்களுக்கும் வழங்கப்பட்டு ஆசிரியரால் வாசித்துக் காட்டப்பட்டது. மாணவர்கள் படங்களைப் பார்த்து கதைகளை விளங்கியதுடன் பின் விருப்பமாக வாசித்தும் காட்டினார்கள்.

குறுகிய காலத்தில் மேற்கொள்ளப்பட்ட வாசிப்பு மற்றும் எழுத்துத் திறன்களை மேம்படுத்தல் செயற்பாடுகளினால் மாணவர்களின் ஆங்கிலப் பாடஅடைவுமட்டத்தில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதை அவதானிக்க முடிந்தது. இது ஆய்வாளருக்கு பெரும் மகிழ்ச்சியைத் தருகின்றது. எனவே மேலுள்ளவாறு பயிற்சிகளைத் தொடர்ச்சியாக வழங்கும் போது இன்னும் மாணவரிடையே முன்னேற்றத்தை அதிகரிக்கச் செய்யலாம் என்ற நம்பிக்கை ஆய்வாளருக்கு ஏற்படுகின்றது.

## ஆய்வின் செயற்பாட்டின் மூலம் கண்டறிந்த விடயங்கள்

சாதாரண கற்றல் கற்பித்தல் நடைமுறையில் மாணவர்களின் தனியாள் வேறுபாடுகள் கவனிக்கப்பட்டுக் கற்பித்தல் மேற்கொள்ள முடியவில்லை. ஏனெனில் ஆய்வாளனால் ஆண்டின் ஆரம்பத்தில் தயாரிக்கப்பட்ட வேலைத்திட்டத்தின் படியே பாடத்திட்டம் தயாரிக்கப்பட்டு கற்பிக்கப்பட வேண்டிய நிர்ப்பந்தம் காணப்பட்டது. அத்துடன் குறிப்பிட்ட காலப்பகுதியில் பாடத்திட்டம் பூரணப்படுத்தப்பட்டு அதிபரின் மேற்பார்வைக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்ற நிலையில் ஆய்வாளர் மாணவர்களின் கற்றல் திறன், கற்கும் வேகம் போன்றவற்றைக் கவனித்து செயற்பட முடியாமல் இருந்தது. மேலும் சாதாரண வகுப்பறைச் செயற்பாடுகளின் போது மாணவர்களின் அடைவு மட்டம் அதிகரிக்காமைக்கான காரணங்களாகப் பின்வருவனவற்றையும் குறிப்பிடலாம்.

- மாணவர்கள் விளக்கம் இன்றி உள்ள பாடப்பகுதியில் மேலதிக பயிற்சிகள் வழங்குவதற்கு நேரம் போதாமை.
- படங்களுடன் கற்பித்தல், விளையாட்டு மூலம் கற்பித்தல், மீள வலியுறுத்தல் போன்ற செயற்பாட்டிற்காக மேலதிக பாட வேளைகளை நேரசூசிகையில் ஒதுக்க முடியாமை.
- ஆரம்ப இடைநிலை வகுப்புக்களில் ஆங்கிலப் பாடத்திற்கு ஆசிரியர் இன்மையால் கற்பிக்கப்படாது விடப்பட்ட விடயங்கள் மாணவர்களுக்குத் தெரியாது காணப்பட்டமை.
- விளக்கம் இன்றிய கற்பித்தலால் மாணவர்கள் தேவையற்ற காரணங்களை வீட்டில் கூறி பாடசாலைக்கு சமூகமளிக்காமை.
- ஆங்கில பாடம் தமக்குத் தெரியாது, விளங்காது என்ற மனப்பாங்கினை வளர்த்துக் கொண்டமை.
- இன்றைய நவீன தொழில்நுட்ப உலகின் ஆங்கிலக் கல்வியின் முக்கியத்துவத்தினை உணராமை.
- சுய கற்றல், சுய ஊக்கம் ஆங்கிலப் பாடக் கற்றலில் இல்லாமை.

மேற்குறிப்பிட்ட கண்டறிந்த விடயங்கள் விசேட மேம்பாட்டுத் திட்டத்தை செயற்படுத்தியதன் விளைவாகப் பெற்ற அனுபவங்களோடும், ஆய்வாளனின் முன்னைய கற்பித்தல் அனுபவங்களில் இருந்தும் பெறப்பட்டது.

## எதிர்கால செயற்பாடுகளுக்கான விதப்புரைகள்

வாசிப்பு, எழுத்துத்திறன்களை மேம்படுத்தி ஆங்கிலப் பாட அடைவு மட்டத்தை உயர்த்துவது தொடர்பாக மேற்கொண்ட செயல்நிலை ஆய்வில் இனங்காணப்பட்ட பிரச்சினைகள் ஓரளவுக்கு தீர்க்கப்பட்டாலும் எதிர்காலத்தில் இதனை முற்றாகத் தீர்ப்பதற்கு எவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட வேண்டும் என்பது தீர்மானிக்கப்பட வேண்டியது அவசியமானதாகக் காணப்படுகின்றது. இந்தவகையில் ஆய்வாளனால் பின்வரும் விதப்புரைகள் முன்வைக்கப்படுகின்றன.

ஒவ்வொரு வகுப்புக்கும் உரிய எழுத்துக்கள், சொற்கள், உச்சரிப்பு, வாசிப்பு பொறிமுறைகள் போன்றவற்றை அந்தந்த வகுப்பில் அடைய வைப்பதற்கான முயற்சிகளை ஆசிரியர்கள் எடுத்துக்கொள்ள வேண்டும். இந்தவகையில் ஆய்வாளரால் கண்டறியப்பட்ட விடயங்களுக்கு ஏற்ப பின்வரும் விதப்புரைகளை எதிர்காலத்தில் மேற்கொள்ளலாம் என ஆய்வாளர் கருதுகின்றார்.

1. **பிரச்சினைகளை உடனுக்குடன் தீர்த்துக் கொள்ளல்.**

   வாசிப்பதில் பின்தங்கிய மாணவர்களுக்கு உடனுக்குடனேயே அவர்களின் பிரச்சினைகள் கவனத்தில் எடுத்து தீர்க்க நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும்.

2. **மேலதிக எழுத்து, வாசிப்புப் பயிற்சிகளை வழங்குதல்.**

   மாணவருக்குப் பாடத்திட்டத்திற்கு புறம்பான எழுத்துப் பயிற்சிகள், வாசிப்புப் பயிற்சிகளை வழங்குவதன் மூலம் மாணவர்களை எழுத வாசிக்கத் தூண்ட வேண்டும்.

3. **வாசிப்புக்கான சொற்களை படங்களுடன் வகுப்பறையில் காட்சிப்படுத்தல்.**

   மாணவர்களால் வாசிக்க முடியாத சொற்களைப் பெரிய எழுத்துக்களில் எழுதித் தொங்கவிடுதல் அல்லது படங்களுடன் எழுத்துக்களை எழுதி காட்சிப்படுத்தினால் மாணவர்கள் ஆர்வமாக அதனைக் கவனித்து வாசிக்கத் தூண்டப்படுவார்கள்.

4. **மாணவரின் பாடசாலை வரவை அதிகரிக்க நடவடிக்கை எடுத்தல்.**

   மாணவர்களைப் பாடசாலைக்கு ஒழுங்காக வரவைப்பதற்கு பெற்றோர் சந்திப்புக்களை அடிக்கடி ஏற்படுத்தி அவர்களுக்கு மாணவர்களின் பாடசாலை வரவின் முக்கியத்துவம் பற்றி விளக்குவதுடன், மாணவர்கள் பாடசாலைக்கு ஒழுங்காக வரவினைக் கவனிக்கும்படி கேட்டல்.

5. **சுயவாசிப்பைத் தூண்டுதல்**

   மாணவர்களுக்கு வாசிப்பினால் ஏற்படும் நன்மைகளை விளக்கி வாசிப்பின் மூலம் ஒவ்வொரு நாளும் ஐந்து சொற்களை எழுதி வந்து காட்டும் படி கேட்டல். இதன்மூலம் ஆங்கில சொல்வளம் அதிகரிக்கவும் முடியும்.

6. **ஆங்கில வாசிப்பின் தேவையை உணரவைத்தல்.**

   தற்போதும், எதிர்காலத்திலும் ஆங்கில மொழியின் தேவையை உணரவைத்தல். அதாவது தகவல், தொழில்நுட்ப, கணினி உலகில் ஆங்கில வாசிப்பு, ஆங்கில கல்வி மிகவும் முக்கியமானது என மாணவர்களுக்கு விழிப்புணர்வு வழங்கல்.

7. **மாணவர்களின் ஆர்வத்தைத் தூண்டுதல்**

   மாணவர்களின் தனியாள் வேறுபாட்டிற்கு ஏற்ப கவர்ச்சிகரமான கற்றல், கற்பித்தல் நுட்பங்களை பயன்படுத்தி அவர்களின் ஆங்கிலம் கற்றலுக்கான ஆர்வத்தைத் தூண்டுதல்.

## நிறைவுரை

இன்றைய தகவல் தொழில்நுட்ப உலகில் ஆங்கில் மொழியானது மிகவும் அத்தியாவசியமான மொழியாக மாறிவிட்டது. இதன் அடிப்படையில் இன்றைய அரசாங்கமும், கல்வி நிறுவனங்களும் ஆங்கில மொழிக்கு மிகவும் முக்கிய இடத்தை வழங்கி எமது ஆரம்ப, இடைநிலை, உயர்நிலை கல்விகளும் ஆங்கில மொழி மூலமாக ஆரம்பமாகிவிட்டன. இதனால் இன்றைய மாணவர்கள் ஒவ்வொருவரிடமும் ஆங்கில மொழித்திறன் விருத்தி கட்டாயமாக எதிர்பார்க்கப்படுகின்றது. இக்கருப் பொருளை அடிப்படையாக கொண்டு வஃமதீனா வித்தியாலயத்தில் தரம் 07, தரம் 08 மாணவர்களின் ஆங்கில பாடத்தில் வாசிப்பு மற்றும் எழுத்துத் திறன்களை மேம்படுத்தி ஆங்கிலப் பாட அடைவு மட்டத்தை அதிகரித்தல் என்னும் தலைப்பின் கீழ் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இங்கு ஆய்வாளர் கருதுகோளைப் பரிசோதித்து மாணவர் அடைவில் மேம்பாட்டை வெளிப்படுத்தியுள்ளதை நிரூபித்திருந்தாலும், மாணவர்களைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு உண்மையான வினைத்திறனான வாசிப்பு மற்றும் எழுத்துத் திறன்கள் மேலும் மேம்பட வேண்டியது இன்றியமையாததாகும். ஆங்கில பாட அடைவில் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ள மாணவர்களுக்கு 20 வாரங்கள் வழங்கப்பட்ட பயிற்சி போதுமானது எனக் குறிப்பிட முடியாது. அவர்கள் தாமாக செயற்படும் வரை அவர்களுக்கான கற்றல் சூழல் வழங்கப்பட வேண்டும். ஆகவே இச்செயல்நிலை ஆய்வுகள் மேலும் மேலும் முன்னெடுக்கப்பட வேண்டும்.

இச்செயல்நிலை ஆய்வின் போது மாணவர்கள் பல்வேறு விடயங்களில் இடர்பாடுகளைச் சந்தித்ததை அவதானிக்க முடிந்தது. ஆங்கில பாட அடைவு மேம்பாடு என்பது ஒரு பரந்த விடயமாகும். இதில் குறித்த பகுதி மட்டுமே மாணவர்களுக்கு பயிற்றுவிக்கப்பட்டது. இச்செயற்பாட்டில் மாணவர்கள் இடர்பாடுகள் தொடர்ச்சியாக கவனிக்கப்பட்டு ஆய்வுகள் தொடர்ச்சியாகமேற்கொள்ளப்படல் வேண்டும்.

ஆசிரியர், மாணவர்கள் என்ற எல்லையைக் கடந்து பாடசாலைச் சமூகம், பெற்றோர், கிராம அபிவிருத்தி உறுப்பினர்கள், மதத்தலைவர்கள் என அனைவரும் இணைந்து இத்தகைய ஆய்வுகளைத் தொடர்ச்சியாக முன்னெடுத்து மாணவர்கள் சமுதாயத்தை முன்னேற்ற முயல வேண்டும். அர்ப்பணிப்புடன் பணியாற்றுவதனூடாக பிரச்சினைகளை வெற்றி கொண்டு நல்ல சமுதாயத்தை உருவாக்குவது அனைவரது தேவையும்,கடமையுமாகும்.

## உசாத்துணை நூல்கள்


அனுசியா.ச. (2010). கல்வியும்-மொழியும் ஓர் பார்வை.கமுதி. ஜனவரி – மார்ச். கொக்குவில்.Volume 01, Number 01.

கருணாநிதி.மா. (2008). கற்றல் கற்பித்தலில் மேம்பாட்டிற்கான வழிமுறைகள். கொழும்பு. சேமமடு பதிப்பகம்.

கல்வி உயர்கல்வி அமைச்சு (2015). ஆசிரியர் கைநூல் ஆங்கிலம். தரம் 07. கல்வி வெளியீட்டுத்

திணைக்களம்.

சந்திரசேகரம். சோ. (2004), கல்வி – ஒரு பன்முக நோக்கு. கொழும்பு, உமா பதிப்பகம்.

சின்னத்தம்பி. க. (2010), கல்வியியல் அளவீடும் மதிப்பீடும். கொழும்பு சேமமடு பதிப்பகம்.

சின்னத்தம்பி.மா, (2008),ஒக்டோபர், ஆசிரியர் தொழில் மேம்பாடும் வாசிப்பும், அகவிழி, விழி 05, பார்வை 50,கொழும்பு, அகவிழி வெளியீட்டகம்.

சின்னத்தம்பி.மா, (2010), இலங்கையில் ஆங்கிலக் கல்வி கற்றலும் கற்பித்தலும்,கமுதி, ஏப்பிரல் – யூலை, கொக்குவில்,Volume 01 ,Number 02.

சொக்கலிங்கம், (1982),வாசிப்பும் மொழி விருத்தியும்,யாழ்ப்பாணம், கமலம் பதிப்பகம்.

தெய்வேந்திரன்.பொன், (2008), ஒக்டோபர், இன்று வாசிப்பைத் தூண்டுவதில் ஆசிரியன், அகவிழி, விழி 05, பார்வை 50, கொழும்பு, அகவிழி வெளியீட்டகம்.

யசோதா. க. (2007), ஆங்கில உரத்த வாசிப்புத் திறனை மேம்படுத்தல், வவுனியா.

ஜெயராசா. சபா, (2013),ஆய்வு முறையியல், கொழும்பு, சேமமடு பதிப்பகம்.

Premawathie. P.H, (2011), Enhancing Performance in Writing - Action Research, Colombo.

Ragit. R, (1962), Education in Colonial Ceylon, Kandy, The Kandy Press Limited

Jobillico. (2007). What are the benefits of reading? Retrieved from http://wiki.answers.com/Q/What_are_the_benefits_of_reading